7th November 1966]

பட்டாக்களுக்கு மனுப் போடலாம் என்பதைத்தான். கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது ஸுவோ மோட்டுவாக சர்க்காரிலே பட்டாக்கள் வழங்கலாம் என்ற காரணத்தினாலே அது வரையில் ஒத்திப்போட்டால் என்ன என்று கேட்கிறார்கள். அதில் நடைமுறையில் பல கஷ்டங்கள் வரும். யார் யாருக்கு குடிவாரம் இருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்களோ அந்த அடிப்படையில்தான் பட்டா கொடுக்கவேண்டும். அதற்குக் குறிப்பிட்ட காலத்திற்குள் மனுப் போடவேண்டும். அப்படி அவர்கள் போட்டாலும் போடாமல் இருந்தாலும், சர்க்காருக்கு உண்மையாகக் கொடுக்கலாம் என்ற நிலைமை இருந்தால் அவர்கள் பர்மிசபிள் அயிட்டமாகப் போடலாம் என்று இருக்கிறது. ஆகவே, அவர்கள் என்குயரிக்குப் போன தேதியிலிருந்து காலம் கொடுத்தால் அதற்குப் பிறகு பரிசீலனை செய்வதற்குக் கால தாமதம் ஏற்படும். அந்தச் சட்டத்தை விரைவாக நடைமுறைக்குக் கொண்டு வருவது கஷ்டமாக இருக்கும். காலத்தை ஒத்திப் போடுவதற்கு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

*410 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state the details of steps taken so far for the enforcement of Inam Estates Abolition Act and the Minor Inams Abolition Act?

THE HON. SRI V. RAMAIAH : A statement [a] is placed on the Table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மூன்று வருட காலம் ஆகியிருக்கிறது. எத்தனை இனாம்கள் சம்மந்தமாக செட்டில்மெண்ட் முடிந்து பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் சொல்லமுடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். செட்டில்மென்ட் ஆவதற்கு நிறையக் கஷ்டங்கள், சங்கடங்கள் இருக்கின்றன . . . .

திரு. மீ. கலியாணசுந்தரம் : அப்படியானால் இன்னும் ஒரு கிராமத்தில் கூட ஆகவில்லையா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லை. நான் குறிப்பிட்டேன். செட்டில்மெண்ட் ஆவதற்கு காலதாமதம் ஆகின்றது என்று.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மூன்று வருஷங்கள் ஆகியும் ஒரு கிராமத்தில் கூட பட்டாக் கொடுக்காமல் இருக்கிறது என்றால் இது சட்டத்திலே இருக்கின்ற கோளாறு அல்லது நிர்வாகத் திறமையிலே உள்ள குறைபாடா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : சட்டத்திலே கோளாறு இல்லை, நிர்வாகத் திறமைக் குறைபாடும் இல்லை. இதிலே எத்தனையோ நிலைமைகள் ஏற்படுகின்றன. ஹைக்கோர்ட்டுக்குப் போகவேண்டிய

a Printed as Appendix VI on pages 567-570.

நிலைமை ஏற்பட்டது. செட்டில்மெண்ட் செய்வதற்கு இப்பொழுது இருக்கக்கூடிய விதிமுறைகளுக்குத் தகுந்த முறையில் கால தாமதம் ஆகத்தான் செய்யும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இதற்கிடையில் இனாம்தார்கள் விவசாயிகளை வெளியேற்றுவதையும், மரம் போன்றவற்றை வெட்டு வதையும் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறது.

கனம் திரு. வெ. ராமையா: எந்த எந்த இடங்களிலே அம்மாதிரி கஷ்டங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறதோ அங்கே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

* 411 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் வானூர் தொகுதியில் பொம்மையார் பாளையம், குயிலா பாளையம், பிள்ளைச்சாவடி முதலான கிராமங்களில் உள்ள நிலங்கள் அனைத்தின (சர்க்கார் புறம் போக்காக) புறம்போக்காக மாற்றப்பட்டது உண்மையா?

கனம் திரு. வெ. ராமையா: இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த குயிலா பாளையம், பொம்மைய பாளையம் கிராமங்களிலே உள்ள மயிலம் சிவசுப்பிரமணியர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை அனைத்தினப் புறம்போக்காக சர்க்கார் எடுத்துக்கொண்டார்கள். அங்கே முன்னால் பயிர் செய்து கொண்டிருந்தவர்கள் எல்லாம் வெளியேற்றப்பட்டார்கள். சர்க்கார் புறம்போக்காக வந்து விட்டன என்ற காரணத்தினால்தான் எத்தனை பேர்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டது என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். அந்த நிலங்களுடைய விஸ்தீரணம் எவ்வளவு? இனிமேலாவது அவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதற்கு முன்வருவார்களா?

கனம் திரு. வெ. ராமையா: அப்படி நடவடிக்கைகள் எடுப் பதற்கு முன்னால் செட்டில்மெண்ட் என்குயரி நடக்க வேண்டியிருக் கிறது. என்குயரி நடந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது என்குயரிக்குப் பாதகமான எதையும் நான் சொல்வது சரியல்ல.

Devasthanam lands

*412 Q.—Sri K. R. SAMBANDAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any representation, dated 14th August 1964, has been made by the Mayuram tenants who have raised their houses in the Devasthanam lands in Municipal limits to repeal the City Tenants' Protection Act; and